குளியாபிடிய நகர சபை - 2023

---------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குளியாபிடிய நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களுடன் நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உட்பட அதன் செயற்பாடுகள் தொடர்பாக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181 (1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 (I) உப பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குளியாபிடிய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள்

நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) உப பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்திருந்த 04 தளபாட உபகரணங்களின் பெறுமதி ரூபா 348,550 மற்றும் ரூபா 453,550 பெறுமதியான 07 இயந்திர உபகரணங்களின் பெறுமதி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி கணக்கீடு செய்திருக்காததுடன் 2021 திசெம்பர் 31 திகதி கணிப்பீட்டு சபை தீர்மானத்தின் பிரகாரம் பராதீனம் செய்யப்பட்ட 12 தளவாட உபகரணங்களின் பெறுமதி ரூபா 163,543 தொகை சொத்துக்கள் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | சரியாக கணக்கு வைக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வைப்பு பதிவேட்டின் பிரகாரம் விலைமனு காப்பு பிணை வைப்பு மீதி ரூபா 971,675 ஆன போதும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,402,630 ஆக ரூபா 430,955 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதென. | சரியாக கணக்கு வைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி முடிவடைந்திருக்காத வழக்கு நடவடிக்கை ஒன்று காணப்பட்டதுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | - மேற்படி - | எதிர்பாராத பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வேலை கடன்கொடுனர் கணக்கின் மீதி மற்றும் அதனுடன் தொடர்புடைய அட்டவணைகளின் காணப்பட்ட மீதிக்கிடையில் ரூபா 13,036,162 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | அவதானிப்புடைன் இணங்குகிறேன். | வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மை | செயலாளரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | பெறுமதி ரூபா 8,691.018 ஆன 514 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2002 பெப்ரவரி 25 திகதிய இலக்கம் 01/2002 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான வாகனங்களின் உடலில் அரச சின்னம் பொறிக்கப்பட்டி இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | உள்ளூராட்சி சுற்றறிக்கை | | | |
| (i) | இலக்கம் 2018/elocal government 01 மற்றும் 2018/07/19 கொண்ட சுற்றறிக்கை | இணைத்தினூடாக விண்ணப்பம் சமர்பிக்க மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகளை செய்ய பிரஜைகளிற்கு வசதி வழங்கியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ii) | இலக்கம் 2010/02 மற்றும் 2010/07/30 திகதி கொண்ட சுற்றறிக்கையின் 1.2. ii பிரிவு | பணியாற்றும் போது விடய மாற்ற முறை மற்றும் அவ்வாறு செய்ய கடினமாக அலுவலர்களிற்காக 02 ஆண்டுகளிற்கு ஒரு முறை பிரிவு மாற்ற முறையொன்றை செயற்படுத்த வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானங்களை மிகைத்த செலவினம் ரூபா 39,671,397 ஆனதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 179,885,209 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 ஆண்டு | | | | 2022 ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை (பட்டியலிட்ட வருமானத்தில்) | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை (பட்டியலிட்ட வருமானத்தில்) |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரியும் வரியும் | 28,675 | 28,288 | 25,737 | 28,860 | 28,675 | 26,736 | 26,867 | 28,196 |
| வாடகை | 216,636 | 25,075 | 24,524 | 3,609 | 216,636 | 21,065 | 20,060 | 3,197 |
| உத்தரவுப ்பத்திரக் கட்டணம் | 17,930 | 21,087 | 3,907 | - | 17,930 | 12,197 | 12,089 | - |
| ஏனைய வருமானம் | 210,903 | 138,079 | 154,288 | 13,270 | 44,815 | 123,022 | 295,935 | 14,009 |
| கூட்டுத் தொகை | 474,144 | 212,529 | 208,456 | 45,739 | 308,056 | 183,020 | 354,951 | 45,402 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலுவை வீதவரி ரூபா 28,860,313 ஆனது. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | நிலுவை வரித் தொகையை விரைவில் அறவிட வேண்டும் |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதியன்று 2020 சனவரி மாதம் முதல் அறவிட வேண்டியதாக காணப்பட்ட வாடிவீட்டு வாடகை ரூபா 2,062,413 ஆனது. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | நிலுவை வாடிவீட்டு வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலவிய நகரசபை கட்டிட நிலுவை வாடகை மீதி ரூபா 244,500 ஆனது. | - மேற்படி - | நிலுவை நகரசபை கட்டிட வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக புதிய வியாபார கட்டிடத் தொகுதி கடை வாடகை ரூபா 195,248,200 தொகை மதிப்பீடு செய்திருந்த போதும், ஆண்டினுள் அறவீடு வெறிதாக இருந்தது. | - மேற்படி - | மதிப்பீடு முடியுமானவரை நடைமுறை சாத்தியமாக வேண்டும். |
| (உ) | நகரசபை செயலாளரின் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டிற்குரியதாக 2023 திசெம்பர் 31 திகதியன்று கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட முத்திரை கட்டணம் ரூபா 1,855,675 ஆனது | அவதானிப்புடன் இணங்குகிறேன். | நிலவைத் தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின்ன் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நகர சபை கட்டளை சட்டத்தின் 157 பிரிவின் கீழ் முக்கிய விடயங்களை நிறைவேற்ற துணைச் சட்டம் விதிக்க முடியுமாக இருந்த போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரை 04 விடயங்களிற்காக மாத்திரம் சபையினால் துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | சட்டத்தின் 126 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக ரூபா 1,278,263 தொகை செலவிட்டிருந்தது. கடந்த ஆண்டிற்கு ஒப்பாக இயற்கை பசளை உற்பத்தி 3,810 கிலோ கிராமினால் குறைவடைந்திருந்து. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | உக்கலடையும் மற்றும் உக்கலடையாத கழிவுகளை உரியவாறு முகாமைத்துவம் செய்து வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை வளர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின்ன் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று கிடைக்க வேண்டிய 12 கணக்குகளின் பெறுமதி ரூபா 49,711,408 ஆனது | அவதானிப்புடன் இணங்குகிறேன். | அறவிட வேண்டிய மீதிகளை விரைவில் அறவிட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 837,768,595 ஆனது. | - மேற்படி - | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டும். |
| (இ) | நகரசபைக்கு சொந்தமான பொதுச் சந்தை இலக்கம் 02 கடையறையை 2018 ஆண்டில் குத்தகைக்கு பெற்றுக் கொண்ட நபர் ரூபா 1,084,482 குத்தகை வாடகை செலுத்துவதனை புரக்கணித்துள்ளதால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த போதும், சபைக்கு வழங்கியிருந்த முகவரியிலிருந்து குடியிருப்பை விட்டுச் சென்றுள்ளதால் வழக்கு செயற்பாடுகள் நின்றுள்ள போதும் உரிய முன் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 10,425,000 ஆன 17 கருத்திட்டங்கள் மீளாய்வாண்டில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | கருத்திட்டங்களை நிறைவேற்றும் போது கால தாமதத்தை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின்ன் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேட்டில் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக தகவல்களை பேணிச் சென்றிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | நிலையான சொத்துப் பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச் செல்ல வேண்டும். |
| (ஆ) | சபையினால் பராமரிக்கும் 07 காணிகளின் உரிமையை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | சொத்துக்களின் உரிமையை சுவீகரிக்க வேண்டும் |

**3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபையின் அங்கீகார ஆளணியினரில் 72 வெற்றிடங்களானதுடன் மிகை ஆளணியினர் 01 ஆகும். | அவதானிப்புடன் இணங்குகிறேன். | ஆளணியினர் தேவைப்பாட்டை கால ரீதியாக மீளாய்வு செய்ய வேண்டும். |

**3.5 வாகனத் தொகுதி முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று சபையின் பெயரில் பதிவு செய்யப்படாத 06 வாகனங்கள் காணப்பட்டன. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | வானங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். |
| (ஆ) | பராதீனத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த டெக்டர் ஒன்று டேலர் ஒன்று மற்றும் புல் வெட்டும் இயந்திரமொன்று மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை பராதீனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | பராதீனம் செய்யப்பட வேண்டிய சொத்துக்கள் பராதீனம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான 4 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரை காலமாக விளைவற்று நிலவின. | - மேற்படி - | விலைவற்ற சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| சபையின் உள்ளக் கணக்காய்வு அலவை நிறுவி அதன் கடமைக்காக அலுவலர் ஒருரை நியமித்திருந்த போதும் சபையின் அனைத்து நடவடிக்கைகளும் உள்ளடங்கும் வகையில் பொருத்தமான மற்றும் போதியளவான கணக்காய்வு மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | அனைத்து துறைகளும் உள்ளடங்கும் வகையில் உள்ளக கணக்காய்வை மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாட்டு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரைகள் | சிபார்சு |
| --- | --- | --- |
| வருமான விடயங்கள் 05 இல் மதிப்பிட்ட மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 25 சதவீதம் முதல் 774 சதவீதம் வரை மற்றும் 07 வருமான விடயங்களில் 40 சதவீதத்திலும் கூடிய வித்தியாசம் காணப்பட்டது. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | வருட ஆரம்ப வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பில் எதிர்வுகூறி வரவு செலவு திட்டத்தை தயாரிக்க வேண்டும் |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரைகள் | சிபார்சு |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் நிலைபேறான அபிவிருத்திக் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்ளவதற்காக ரூபா 1,017,715,000 ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்து திட்டமிட்டிருந்த 23 அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முழுமையாக கைவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 1,026,085,000 ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த கருத்திட்டங்களின் நிதி முன்னேற்றம் ரூபா 2,253,344 தொகை அதாவது 0.2 சதவீதம் மாத்திரமே ஆகும். | அவதானிப்புடன் இணங்குகிறேன். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள வேண்டும் |